**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 141/2003**
**நாள். 03.02.2026**
**வா.சா.3- ராசப்பன்**
**த/பெ - பழனியப்பகவுண்டர்**
**12ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. நான் தற்போது தோப்புபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் தோப்புபட்டியில் வசித்து வருகிறேன் என்பதற்கு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் ஆதார் அட்டை உள்ளது. நிலம் உள்ளது. தோப்புபட்டியில் தான் குடியிருந்து வருகிறேன். வேண்டும் என்றால் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். நான் வேடசந்தூர் டவுனில் குடியிருந்து வருகிறேன் என்றாலும், வழக்கிற்காக தோப்புபட்டியில் குடியிருந்து வருகிறேன் என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

2. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது, சொத்து இருக்கும் இடம் தெரியும்.

3. தாவா சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சடையப்பகவுடருக்கு பாத்தியப்பட்டிருந்தது. சடையப்பகவுடரும், அவரது வாரிசுகளும் பாகப்பிரிவினை செய்து கொண்டபின்னர், தாவா சொத்துக்கள் சம்பந்தமாக பல பதிவு பத்திரங்கள் ஏற்பட்டுள்ளன என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சவடமுத்துவின் மக்களான ராமசாமியும், சத்தியமூர்த்தியும் தாவா சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். வாரிசு அடிப்படையில் அனுபவித்து வந்தார்கள்.

5. 1ம் பிரதிவாதி பொன்னம்மாள் சத்தியமூர்த்தியின் மனைவி என்றால் சரிதான். பொன்னம்மாள் மற்றும் சத்தியமூர்த்திக்கு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான்.

6. சத்தியமூர்த்தி மின்சாரத்துறையில் வேலை பார்த்து வந்தார் என்றாலும், பணியின்போது மின்சாரம் தாக்கி விபத்துக்குள்ளாகி இறந்துவிட்டார் என்றாலும் சரிதான்.

7. சத்தியமூர்த்தி இறந்தபின்னர் அவரது பணிக்கொடை மற்றும் பென்சன் ஆகியவற்றை அவரது மனைவி பொன்னம்மாள் அனுபவித்து வருகிறார் என்றால் அப்படி

சொன்னார்கள் அதுபற்றி எனக்கு முழுமையாக தெரியாது.

8. பொன்னம்மாள் மற்றும் சுப்பையா திருமணம் செய்து குடும்பம் நடத்தி வந்தார்களா என்றால் திருமணம் செய்து கொண்டார்களா என்பது எனக்கு தெரியாது, ஆனால் குடும்பமாக நீண்டகாலமாக கணவன் மனைவியாக வாழ்ந்து வந்தது தெரியும்.

9. பொன்னம்மாளும், சுப்பையாவும் குடும்பமாக சேர்ந்து வாழவில்லை என்றாலும் வழக்கிற்காக வாதிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

10. சர்வே எண்.1057/6 க்கு கட்டுப்பட்ட இடத்தை 12ம் பிரதிவாதி சரியான பிரதிபிரயோஜனத்திற்கும், உண்மையான உரிமையாளரிடமிருந்தும் கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

11. எனக்கு பல வழக்குகளில் சாட்சியம் அளித்து பழக்கம் உள்ளது என்றால் சரியல்ல. இதற்கு முன்பு ஒரே வழக்கில் மட்டும் சாட்சியம் அளித்துள்ளேன். நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதை வழக்கமாக வைத்துள்ளேன் என்றாலும், வாதிகளிடமிருந்து பணத்தை பெற்றுக்கொண்டு வாதிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

12. தாவா சொத்துகள் பொன்னம்மாளுக்கு பாத்தியப்பட்டடிருந்தது என்றாலும், பொன்னம்மாள் ராமசாமியிடம் பாகம் கேட்டு எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றாலும், ராமசாமிக்கு தாவா சொத்துக்களில் எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**